THE TIMES OF INDIA
சமயம்

# தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தை ஜீரணிக்க முடியாது! சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி!

Authored by அன்னபூரணி L | Samayam Tamil 29 Jul 2024, 6:17 pm



தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தை ஜீரணிக்க முடியாது எனவும் பணியில் இருந்த அதிகாரிகளின் சொத்து விவரங்களை குறித்து விசாரணை நடத்தி மூன்று மாதத்தில் அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

**தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம்:**

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு மே 22 ஆம் தேதி தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடுமையான போராட்டம் நடைபெற்றது அப்போது ஏற்பட்ட வன்முறையில் பொதுமக்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர்.

நாடு முழுவதும் இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் இந்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்து முடித்து வைத்த வழக்கை எதிர்த்து துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்ற போது பணியாற்றிய காவல்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகளின் சொத்து விவரங்களை சேகரிக்க சென்னை உயர்நீதிமன்றம் தமிழக லஞ்ச ஒழிப்பு துறைக்கு உத்தரவிட்டது.

**துப்பாக்கி சூடு நடத்தியதை ஜீரணிக்க முடியாது:**

இந்த நிலையில் இன்று இந்த வழக்கு நீதிபதிகள் எஸ் எஸ் சுந்தர் மற்றும் செந்தில்குமார் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, உயிருக்கு பயந்து ஓடிய மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதை ஜீரணித்துக் கொள்ள முடியாது. இதுபோல் இதற்கு முன் கேள்விப்பட்டதில்லை. எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடக்கவும் கூடாது. அதற்காகவே இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சிபிஐ விசாரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை எனவும் லஞ்ச ஒழிப்பு துறையின் விசாரணை நியாயமாக நடத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினர்.

**எப்படி நியாயமாகும்?**

தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு கொடுத்து வழக்கை முடித்து வைத்தது எப்படி நியாயமாகும்? என கேள்வி எழுப்பிய நீதிபதிகள் காவல்துறையினர், இந்த விவகாரத்தில் தங்கள் தவறை உணர வேண்டும் எனவும் கடந்த 2009 முதல் 2014 ஆம்

ஆண்டு வரை ஸ்டெர்லைட் தொழிற்சாலை அனுமதி என்று செயல்பட்டுள்ளதாகவும், ஒரு தனி நபரின் கட்டுப்பாட்டில் அரசு இயந்திரம் செல்வது சமூகத்திற்கு மோசமானது என்பதுதான் எங்கள் கவலை. இப்போதும் அந்த தனி நபர் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல், அனுமதி என்று தொழிற்சாலை செயல்பட்டது அரசிற்கு தெரிந்திருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?, எல்லோரும் இங்கு தான் இருந்தார்கள் என தொடர்ந்து கடுமையான கேள்விகளை எழுப்பினர்.

**மூன்று மாதம் அவகாசம் வழங்கி உத்தரவு:**
இதனையடுத்து அரசு தரப்பில் வருவாய் துறை மற்றும் காவல் அதிகாரிகளின் சொத்து விவரங்களை சேகரிப்பது குறித்த விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய மூன்று மாதம் அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், இதை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் சொத்துக்களை வாங்குவதற்கான வருவாய் ஆதாரங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் விசாரிக்க வேண்டி உள்ளதாக கூறி மூன்று மாத கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டுள்ளனர். மேலும் லஞ்ச ஒழிப்பு துறை விசாரணைக்கு அரசு செயலாளர் டி ஜி பி ஆகியோர் முழு ஒத்துழைப்பை வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

https://tamil.samayam.com/latest-news/state-news/madras-high-court-orders-to-submit-report-on-property-details-of-officials-in-thoothukudi-firing-incident/articleshow/112111611.cms#google_vignette